பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 07 திங்கட்கிழமை 22.12.2025 கதிர் 044

## இனி இது ரகசியம் அல்ல!

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நாளை அவசரமாக இலங்கை வருகிறார். பேரிடரால்பாதிக்கப்பட்டஇலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு ☞ 2

## பயங்கரவாதத் தடைச்சட்டத்திலுள்ள அனைத்தும் புதிய சட்டத்திலுமுண்டு

### மக்கள் போராட்டக் குழு குற்றச்சாட்டு

நீதியமைச்சினால் பயங்கரவாதத்தில் இருந்து இராச்சியத்தை பாதுகாக்கும் சட்டத்தை உருவாக்கும் வகையிலான சட்டவரைவு தயாரிக்கப்பட்;டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் உள்ளடக்கம் ☞ 6

## 70 வீதம் பேருக்கு இதுவரையில் ரூபா 25,000 வழங்கப்பட்டுள்ளது

### மாத இறுதிக்குள் பணி முடிவடையும்

பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீளக்குடியேற்றுவதற்கும் வீடுகளைச் சீரமைப்பதற்கும் ஆளும்தரப்பால் வழங்கப்படும் 25000 ரூபா கொடுப்பனவானது இதுவரையில் 69.56 சதவீதமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி இந்த மாதத்துக்குள் நிறைவடையும் என்று தேசிய பேரிடர் உதவி சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்தார்.

பேரிடரால் 642,375 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கொடுப்பனவு வழங்கப்படவேண்டிய தகுதியான வீடுகளாக 469,457 வீடுகள் கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றில் 299,513 வீடுகளுக்கு இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்று (நேற்று) காலை நிலவரப்படி இன்னும் 169,944 வீடுகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்காக ஆளும்தரப்பு 7.487 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளது. உடனடி உதவிகளுக்காக ஆளும்தரப்பு இதுவரை 4,197 மில்லியன் ☞ 6

## கணக்காய்வாளர் நாயகமாக வெளியாளை நியமிக்க முயல்வதில் ஏதோ மர்மமுண்டு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஒருவரை கொண்டுவர முயற்சிப்பதன் மூலம் அதில், ஏதோ திருட்டுத்தனம் இருக்கிறது. மோசடி இருக்கிறது. அதனால் அரசுத் தலைவர் தொடர்பில் மக்களுக்கு இருந்துவந்தநம்பகத்தன்மை இல்லாமல்போயிருக்கிறது.

பதில் கணக்காய்வாளர் நாயகத்தை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க தகுதி இல்லை என்றால், அவர் பதில் கணக்காய்வாளராக இருப்பதற்கும் தகுதியற்றவர். ஆனால் அவர்தான் கடந்த 8 மாதங்களாக பதில் ☞ 6

# தேர்தல் நடந்தால் என்.பி.பிக்கு 25 ஆசனங்கள்கூடக் கிட்டாது

### ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் தெரிவிப்பு

மக்கள் ஆளும்தரப்பின் மீது வைத்திருந்த நம்பிக்கை இழக்கப்பட்டு வருகிறது. அதனாலே அதன் வெளிப்பாடே ஆளும்தரப்பின் கீழ் இருக்கும் அதிகமான உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டடு வருகின்றது. இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தல் ஒன்று இடம்பெற்றால் ஆளும்தரப்பு 25ஆசனங்களைக்கூட பெற்றாது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி மாவட்ட குழு கூட்டத்தின்பின்னர்செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி இருந்தது. அவர்களால் நிறைவேற்றமுடியாத பலவிடயங்களை வாக்குறுதியாக அறிவித்திருந்தார்கள். ஆனால் இவர்களின் பொய்யை மக்கள் நம்பினார்கள். எமது புராண கதைகளில் பொய் கூறிய சந்தர்ப்பங்களில் பூமி வெடிக்கும் என நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வாறான ஒரு நிலையா தற்போது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது என எண்ணத்தோன்றுகிறது.

அதன்ஒருபிரதிபலனாகவேதற்போது என்.பி.பியின் அதிகாரத்தின் கீழ் இருக்கும் அதிகமான உள்ளூராட்சி மன்றங்களின்அடுத்தவருடத்துக்கான வரவு செலவு திட்டம் தோல்வியடைந்து வருகிறது.இந்நிலையில்நாடாளுமன்ற தேர்தல் ஒன்று இடம்பெற்றால், ஆளும்தரப்பிற்கு25ஆசனங்கள்கூடக் கிடைக்காது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகபிரதமர்தெரிவித்திருக்கிறார். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் ஆளும்தரப்பின் உண்மையான மக்கள் ஆணையை தெரிந்துகொள்ளலாம்.

அத்துடன் நாடு தற்போது எதிர்கொண்டுள்ளபேரிடர்நிலைமையில், நாட்டைமீளகட்டியெழுப்ப,ஆளும்தரப்பு இது தொடர்பான அனுபவமுள்ள தலைவர்களுடன் கலந்துரையாடி ☞ 2

## திஸ்ஸ விகாரைக்குத் தேவையான காணியை வைத்துக்கொண்டு மீதியை விடுவிக்கலாமாம்

விட்டுக் கொடுப்பது பௌத்த தர்மமாகும். திஸ்ஸ விகாரைக்கு தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதி காணியை கோருபவர்களுக்கு, தமிழ் மக்களுக்கு வழங்கி பிரச்சினைக்கு தீர்வு காண்பது சிறந்ததாக அமையும் திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர் ☞ 6

## ரணில் நாடாளுமன்றத்துக்குச் செல்வது காலத்தின் தேவை என்கிறார் கம்மன்பில

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளுக்கு பலமான ஆளுமையாக உள்ளார். தற்போதைய இக்கட்டான நிலையில் அவர் நாடாளுமன்றத்துக்கு மீண்டும் செல்வது காலத்தின் தேவையாகும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,முன்னாள்நாடாளுமன்ற ☞ 2

## திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்களை கைது செய்தது பொலிஸ்

### இந்து மதத் தலைவர் கைதுக்கு சைவ மாகா சபை கண்டனம்

யாழ். தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப்போராட்டத்தில்பொலிஸார்குவிக்கப்பட்டதில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து, இந்து மதத் தலைவர் மற்றும் அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் நீதிமன்றினால் பிணையில் விடுக்கப்பட்டனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அடாத்தாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறும், விகாரையின் பிக்குவிற்கு ☞ 2

## அரசியலை தொழிலாக அன்றி சேவையாக மாற்ற வேண்டும்

### அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்கிறார் அரசுத் தலைவர் அநுரகுமார

அரசியலை மக்களின் செல்வத்தை குவிக்கும் ஒரு தொழிலாக அன்றி, மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு சமூகப் பணியாக மாற்றும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.



தியதலாவ இலங்கை இராணுவக் கல்வியியல் கல்லூரியில் நேற்று (21) நடைபெற்ற கெட்ட அதிகாரிகள் விடுகை அணிவகுப்புநிகழ்வில் ☞ 2

## இனி இது .....

இந்தியா வழங்கவுள்ள உதவி பற்றி அறிவிப்பதற்காக அவர் இலங்கை வருகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. என்றாலும் இது விடயத்தில் அவரது இலங்கை வருகையின் பின்னால் உதவி வழங்குதல் மட்டுமே விவகாரம் அல்லவென்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவரது கொழும்பு வருகையின்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்புக்கு தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் கட்சித் தலைவர்கள் செல்லவுள்ளனர். தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சிவஞானம், செயலாளர் சுமந்திரன், நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் மற்றும் கிழக்கிலிருந்து சாணக்கியன் ஆகியோரும் புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோருடன் ரெலோ தலைவ் செல்வம் அடைக்கலநாதனும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. செல்வம் தன் மீதான பாலியல்குற்றச்சாட்டுக்களைஅடுத்துகட்சிக்குள் எழுந்த கடும் எதிர்ப்பையடுத்து இனிமேல் கட்சித் தலைவராக எந்தவொரு சந்திப்புக்கும் செல்லமாட்டேன்என்றுதலைமைக்குழுவிற்கு உறுதியளித்திருந்தபோதும், அதை மீறி அவர் இரண்டு தடவைக்ள அத்தகைய சந்திப்புக்களில் கலந்துகொண்டிருந்தார். அதுபோன்றே நாளைய சந்திப்பிலும் அவர் கலந்துகொள்வார் என்று தெரிகிறது.

இந்தச் சந்திப்பில் இந்தியப் பிரதமர் மோடிக்கானஒருகடிதத்தைதமிழ்தலைவர்கள் கையளிக்கவுள்ளனர். அந்தக் கடிதத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்திலும் புதிய அரசமைப்பின் ஊடாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு மாகாண சபைகளை நீக்குவதற்கு எடுக்கும் முயற்சிகள் குறித்தும் பேசுவதற்காக ஒரு சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித் தரும்படியான கோரிக்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அது தவிர மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தும்படி என்பிபி ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுக்கும்படியும் தமிழ்த்தரப்போடுபேசிஅதிகாரப்பகிர்விற்கான ஒரு தீர்வைக் காணும்படி அழுத்தம் கொடுக்கப்படவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், செயலாளரோடு தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள 5 கட்சிகளான, புளொட், ஈபிஆர்எல்எவ், ஜனநாயகப்போராளிகள்கட்சி, சமத்துவக்கட்சிமற்றும்ரெலோஆகியவற்றின் தலைவர்களும் கையெழுத்திடுகின்றனர். அவர்களிடம் இந்தக் கையெழுத்துக்களை தமிழ் அரசின் தலைவர் சிவஞானம் பெற்று வருகின்றார்.

வழக்கமாக இத்தகைய சந்திப்புக்களுக்கு கஜேந்திரகுமாரும் இந்தியத் தூதரகத்தால் அழைக்கப்படுவார். இந்தமுறை அவர் தமிழ்நாட்டில்இருந்ததால்அவருக்குஅழைப்பு அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது.

இந்தச் சந்திப்புக்களால் எந்தப் பயனும் இல்லை என்றாலும் அடுத்த வரவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தீர்வு தொடர்பில் தமிழ் மக்களிடம் கதைவிடுவதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு ஏதாவது ஒரு கொழுகொம்பு தேவைப்படுவதால் இப்போது அவர்கள் இந்தியாவை அதற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் அவ்வளவுதான்.

வாழ்க்கை ஒரு வட்டம் என்பதைப் போன்று தமிழ் அரசியலும் ஒரு வட்டம்தான். இந்தியா, ஐநா. சர்வதேசம் என்று சுற்றி முடிந்து மீண்டும் இந்தியா என்று வந்து நிற்கிறார்கள் தமிழ் அரசியல்வாதிகள். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் முறைமை தொடர்பில் சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் அது தொடர்பான அறிவு ரணில் விக்ரமசிங்கவுக்கு இருக்கிறது. அவர் அமைத்த பாதையிலேயே தற்போதைய ஆளும்தரப்பு பயணிக்கிறது. இவர்களுக்கு மாற்றுத் திட்டம் மேற்கொள்ள தேவையான புரிதல் இல்லை. இவ்வாறன நிலைமையில் அடுத்த வருடம் டிசெம்பர் மாதமாகும்போது நாடு நெருக்கடி நிலைக்கு பயணிக்கும் என்றே நாங்கள் நினைத்தோம். ஆனால் அதற்கு முன்னர் நாடு நெருக்கடி நிலைக்கு தள்ளப்படும் சாத்தியம் இருக்கிறது.

மேலும்பேரிடரால்பாதிக்கப்பட்டமக்களுக்கு உதவித் தொகைகளை வழங்குவதாக ஆளும்தரப்புஅறிவித்துள்ளபோதும். அதற்குத் தேவையான நிதி ஆளும்தரப்பின் கைவசம் இல்லை. சர்வதேச ரீதியில் இதுவரை கிடைத்திருப்பதும் மிகவும் குறைவான தொகையேயாகும். சர்வதேசநாணயநிதியம் அவசர நிதியாக ஒரு தொகை வழங்கத் தீர்மானித்திருக்கிறது. அதுவும் தற்போது தேவையாக இருக்கும் நிதி தேவைப்பாட்டின் ஒரு தசமளவாகும்.

அதனால் ஆளும்தரப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் தொகையை விரைவாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக இந்தப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த அனுபவமுள்ள தலைவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார்.

## அரசியலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரசுத் தலைவர் அநுரகுமார இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நமதுநாடுஒருசிறந்தபாரம்பரியத்தையும் வெற்றிகளையும்பெற்றிருந்தாலும், கடந்த சில தசாப்தங்களாக நாடு அனைத்து வகையான வீழ்ச்சிகளுக்கும் உள்ளாகியுள்ளது. இன்று அனைவருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு, தாய்நாட்டை மீண்டும் உலகில் மதிப்புமிக்க மற்றும் பாராட்டப்படும் ஒரு நாடாக மாற்றுவதாகும்.

ஒரு ஆளும்தரப்பாகவும் அரசுத் தலைவராகவும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை, நாட்டின் வளர்ச்சிக்காக முழுமையாகப்பயன்படுத்துவேன். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், அதற்குத்தேவையான பொறிமுறைகளைத் தயாரிப்பதற்கும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதற்கும் அரசியலை செல்வம் குவிக்கும் தொழில் என்ற நிலையிலிருந்து, பொதுமக்களுக்குச் சேவை செய்யும் சமூகப் பணி என்ற நிலைக்கு மாற்றுவதிலும்ஆளும்தரப்புதனதுபொறுப்பை நிறைவேற்றி வருகிறது.

கடேற் உத்தியோகத்தர்களாக தியத்தலாவஇராணுவகல்வியியல்கல்லூரியில் சேர்ந்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பெற்ற நீங்கள், அதிகாரிகளாக மாறியுள்ளீர்கள். இது உங்கள் வாழ்க்கையில் ஒரு சிறப்புச் சந்தர்ப்பமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். உங்கள் தொழில் வாழ்க்கை முன்னோக்கி செல்ல, மேலும் எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் அடைய வாழ்த்துகிறேன்.

அண்மைய இயற்கை பேரிடரின்போது மக்களின் வாழ்க்கை முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. சிலருக்கு உணவு வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இன்னும் சிலரது உயிர்களைக் காப்பாற்றுவது ஒரு பெரிய சவாலாக அமைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை, ஒவ்வொருசவாலிலும்இலங்கை இராணுவம் பெரும் பங்காற்றியுள்ளது. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். படையினர் மிகவும்கடினமானபணியில்ஈடுபட்டுமக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க கடுமையாக உழைத்து வருகின்றனர்.

உங்களுக்கு இருப்பது தொழில் ரீதியான பொறுப்பு மாத்திரமல்ல. பல்வேறு வகையான தொழில்கள் உள்ளன. உங்கள் நண்பர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு தொழிலுக்கும் அதற்கே உரிய பொறுப்பு மற்றும் மதிப்பு உள்ளது. நீங்கள் மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றுள்ளீர்கள் என்றும் அதேநேரம் ஒரு பெரும் பொறுப்பு உங்கள் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என்றும் நான் நினைக்கிறேன்.

நமது தாய்நாட்டை நாம் மீண்டும் கட்டியெழுப்பவேண்டும். நமது தாய்நாடு பல தரப்பிலிருந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது. ஒருபுறம், நமது அரச பொறிமுறை பலவீனமாகவும் வீழ்ச்சி அடைந்தும் இருந்த ஒரு சகாப்தம் இருந்தது. நமது பொருளாதாரம் பெரும் சவாலுக்கு உள்ளாகி சரிவடைந்து கொண்டிருந்த ஒரு சகாப்தம்இருந்தது. நமதுசமூகத்தின்நல்வாழ்வு முற்றிலுமாக தோழ்வி கண்ட ஒரு சகாப்தம் இருந்தது. மனித உறவுகள் பெறுமதியற்ற உறவுகளாக மாறிக்கொண்டிருந்தன. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலானஉறவுஉடையத்தொடங்கியது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலானஉறவுஉடையத்தொடங்கியது.

மத வழிபாட்டிடங்களுக்கும் நிர்வாக சபைக்கும் இடையிலான உறவு உடையத் தொடங்கியது. நமது நாடு அனைத்து மனித உறவுகளும் உடைந்த ஒரு சகாப்தத்தில் நுழைந்து கொண்டிருந்தது. அதன்போது நமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு என்ன? நாம்வரலாற்றுபாரம்பரியத்தையும்வரலாற்று சாதனைகளையும் கொண்ட ஒரு நாடு. ஆனால் நமது நாடு எல்லா வகையான வீழ்ச்சிகளுக்கும் உள்ளானது. இப்போது நமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு, இந்த தாய்நாட்டை உலகில் உயர்ந்த, மதிப்புமிக்க மற்றும் பாராட்டப்படும் ஒரு நாடாக மாற்றுவதாகும்.

ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள்உள்ளன. அரசுத்தலைவராகவும் ஆளும்தரப்பாகவும், நமக்கு ஒரு பொறுப்பு உள்ளது. பொருளாதாரத்தைக்கட்டியெழுப்பவும் தேவையானபொறிமுறையைத்தயாரிக்கவும், சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யவும், அரசியலை மக்களின் செல்வத்தை குவிக்கும் ஒரு தொழிலாக அன்றி, மாறாக மக்களுக்கு சேவைசெய்யும்ஒருசமூகப்பணியாகமாற்றும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கும்அதேபோன்றபொறுப்புகள் உள்ளன. இங்குகூடியிருக்கும்பெற்றோருக்கும் நமது நாட்டிற்கான பொறுப்புகள் உள்ளன. நமது வழிபாட்டிடங்களுக்கும் பொறுப்புகள் உள்ளன. ஒருவருக்கொருவர் எதிராகச் செயல்படுவதன் மூலமோ அல்லது ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் பார்ப்பதன் மூலமோ இந்தநாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பைமுறையாகநிறைவேற்றுவதற்கான உறுதியானதீர்மானத்துடன்நாம்அனைவரும் செயல்பட்டால் மாத்திரமே நாம் ஒரு நாடாக முன்னேற முடியும்.

ஒருநாடாகநம்மிடம்ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பை இந்த நாட்டைக் கட்டியெழுப்பு வதற்குப் பயன்படுத்துவோம் என்று நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். மேலும் உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். உங்களுக்குவழங்கப்பட்டுள்ள பொறுப்பை முறையாக நிறைவேற்றுமாறு பொதுமக்களையும் நான் அழைக்கிறேன். நாம் அனைவரும் ஒரே குறிக்கோளுடன் தைரியமாக தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற முடிந்தால், வரலாற்றில் நம் நாடு பெற்ற பெருமை மற்றும் கௌரவத்துடன் தாய்நாட்டை மிக விரைவில் மீண்டும் கட்டியெழுப்ப முடியும். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று அழைப்பு விடுக்கிறேன் – என்றார்.

## திஸ்ஸ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஸ்கிரிய பீடத்தின் வடமாகாணத்திற்கான சங்கைநாயக்கர்பொறுப்புவழங்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வலி. வடக்கு பிரதேச சபையின் தீர்மானத்திற்கு அமைய நேற்றுக் காலை விகாரை முன்பாகப் போராட்டம் தொடங்கியது.

இந்தப் போராட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் பொலிஸார் தடையுத்தரவு பெற்றிருந்தனர். நாடாளுமன்றஉறுப்பினர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 29 பேருக்கு எதிராகப் பெயர் குறிப்பிட்டு போராட்டத்தில் அவர்கள் கலந்துகொள்ளத் தடையுத்தரவைப் பெற்றிருந்தனர்.

போராட்டம் இன்று காலை ஆரம்பமானவேளை, விகாரையை அண்மித்த சூழலில் பெருமளவான பொலிஸாரும் கலகம் அடக்கும் பிரிவினரும் குவிக்கப்பட்டிருந்தனர். அங்கு போராட்டத்திற்கு வந்தவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களுடன் முரண்பட்டனர். இதனால் அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்தப் போராட்டம் ஓர் அமைதி வழியான போராட்டம். இங்கு எந்த விதத்திலும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கப்படவில்லை. விகாரைக்குள் போராட்டக்காரர்கள் செல்லவில்லை. விகாரைக்குச் சேதம் விளைவிக்கவில்லை. விகாரைக்குச் செல்லும் வீதியை நீங்கள் எவ்வாறு அடாத்தாக மறித்து வைத்திருப்பீர்கள்? – என்று பொலிஸாரை எதிர்த்துக் கேள்வி எழுப்பிய அரசியல்வாதிகள் ஐந்து பேர் பொலிஸாரால் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர்.

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்கள் சிவகுரு ஆதீன குரு வேலன் சுவாமிகள் என ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இதையடுத்துக் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும் வரை அகன்று செல்லமாட்டோம் என்று நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம்சிறீதரன், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் வீதியில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைதுசெய்யப்பட்டஐவரையும்பொலிஸார் உடனடியாகவே மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவர்கள் ஐவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. அதன் பின்னர் போராட்டமும் நிறைவுக்கு வந்தது.

சட்டபூர்வமற்ற விகாரை விவகாரத்திற்காக சாத்வீகமான முறையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தின்போது சைவ சமயத்தலைவர்களில் ஒருவரான நல்லூர சிவகுரு ஆதீனம் முதல்வர் வேலன் சுவாமிகள் மிக மிலேச்சுதமான முறையில் கைது செய்யப்பட்டதை சைவ மகா சபை வன்மையாக கண்டித்துள்ளது.

வணக்கத்துக்குரிய மதத்துறவி மீது மிக மோசமான நடத்தையை காண்பித்தமை மிகவும்பாரதூரமானதவறாகும். இலங்கையில் உள்ள அனைத்து மதத்தலைவரைகளையும் சமனாக மதிக்க வேண்டிய சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர்கள் ஒரு தலைபட்சமாக சட்டரீதியற்ற முறையில் தனியார்காணியில்அடாத்தாகநிறுவப்பட்டுள்ள ஒரு மதக்கட்டடத்திற்காக அதனை எதிர்த்து போராடிய அந்தப்பிரதேசத்து மதத்தலைவரை மிலேச்சுதனமாக தள்ளிச்சென்று வாகனத்தில் ஏற்றி கைது செய்தமை எமது சமயத்தை அவமதித்த செயலாகவே பார்க்கின்றோம்

இந்த விடயத்தில் அரசு உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணை முன்னடுத்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான எமது சமயத்தலைவர்களை அவமதிக்கும் செயலை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு உறுதி அளிக்க வேண்டும் என்பதை சைவசமய மக்கள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபையினராகிய நாம் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் என்று அகில இலங்கை சைவ மகா சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பைப்புகழ்வதுஎதிர்க்கட்சிகளின் வேலையில்லை. அதற்குதான் ஆளுங்கட்சியில் 159 உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆளுங்கட்சியினர் தமது ஆட்சியின் தவறுகளையும் சரி என்று புகழ்வார்கள். ஏனெனில் சரி எது, பிழை எது என்று அவர்களால் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாது. பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தின் தீர்மானத்தையே அனைவரும் பின்பற்றுவார்கள்.

ஆட்சியாளர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி, மக்களுக்கு அவற்றை எடுத்துரைப்பதே எதிர்க் கட்சிகளின் பொறுப்பு அதனையே நாங்கள் செய்கிறோம். ஆளும்தரப்புச்சிறந்தமுறையில்செயற்பட்டால் அதனை நாங்கள் வரவேற்போம். அனைத்தையும் விமர்சிக்கும் ஜேவிபியின் மனநிலை எமக்கு இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா அவரது பதவியிலிருந்து விலக, அந்த இடத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் என அரசியல் களத்தில் பேசப்படுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்று தெரியானது, ஏனெனில் நாங்கள் பிறிதொரு கட்சியின் உள்ளகவிவகாரங்களில்தலையிடுவதில்லை.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கஎதிர்க்கட்சிகளுக்குபலமானஆளுமையாக உள்ளார். தற்போதைய இக்கட்டான நிலையில் அவர் நாடாளுமன்றத்துக்கு மீண்டும்செல்வது காலத்தின் தேவையாகும். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் பலமாகச் செயற்பட்டால் மாத்திரமே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் – என்றார்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தத் தடவையாவது சந்திப்பு பயனுள்ளதாக அமையட்டும்

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நாளை செவ்வாய்க்கிழமை [23.12.2025] இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது இந்தப் பயணம், வழக்கமான இருதரப்பு தூதரகச் சந்திப்புகளைத் தாண்டி, அரசியல் ரீதியாகவும், இன அரசியல் தீர்வுகள் தொடர்பிலும் முக்கியத்துவம் பெறுகின்றதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் கொழும்பில் அவரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ள நிலையில், இந்தப் பயணம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை மீண்டும் உலகின் கவனத்திற்கு கொண்டு வரும் ஒரு சந்தர்ப்பமாக அமையக்கூடும்.

அமைச்சர் ஜெய்சங்கரின் பயணத்தின் பிரதான நோக்கங்கள் பல அடுக்குகளில் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை. முதலாவதாக, இந்தியா இலங்கை இடையிலான பேரிடர் மீட்பு உதவி, பொருளாதார ஒத்துழைப்பு, கடன் மறுசீரமைப்பு, முதலீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்கள் குறித்து முன்னேற்றம் காண்பதே அவரது அரசியல் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம்பெறுகிறது. இரண்டாவதாக, இந்துப் பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு, சீனாவின் அதிகரிக்கும் செல்வாக்கு, துறைமுகங்கள் மற்றும் கடற்படை ஒத்துழைப்பு போன்ற மூலோபாய விடயங்களும் விவாதிக்கப்படவுள்ளன. மூன்றாவதாக, இலங்கையின் உள்நாட்டு அரசியல் நிலைத்தன்மை, இன நல்லிணக்கம் மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை மீள வலியுறுத்துவதற்கான வாய்ப்பாகவும் இந்தப் பயணம் அமைகிறது.

இந்த மூன்றாவது அம்சமே, தமிழ்த் தலைவர்களின் சந்திப்புகளில் மையமாக இருக்கும் விடயமாகும். கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்த் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வரும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தல், அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தல், அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலான அதிகாரப் பகிர்வு தீர்வை உருவாக்கல் போன்ற கோரிக்கைகள், மீண்டும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளன. இவை தொடர்பில் இந்தியப் பிரதமரின் கவனத்தைக் கோரும் ஒரு கடிதமும் தமிழ்க் கட்சிகளால் கையளிக்கப்படவுள்ளன.

மாகாண சபைகள் செயலிழந்து பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், ஜனநாயக பிரதிநிதித்துவம் அடிப்படையாகவே முடக்கப்பட்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு கடந்த காலங்களில் மிகக் குறைந்தளவிலேனும் காட்டப்பட்ட ஒரு அறிகுறிக்கும் அதன் மூலம் சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் அரசியல் கட்டமைப்பு இல்லாத நிலை தொடர்கிறது. இது நல்லிணக்கத்திற்கும், அரசியல் நிலைத்தன்மைக்கும் பாதகமானதாகும். இந்தச் சூழலில், மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை, வெறும் தேர்தல் அரசியல் கோரிக்கையாக அல்ல; ஜனநாயக உரிமையை மீட்டெடுக்கும் அடிப்படை வலியுறுத்தலாகவே பார்க்கப்படவேண்டும். மாகாண சபைகள் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைக்கான ஒரு தீர்வோ அல்லது தீர்வுக்கான அடிப்படையோ அல்ல என்பது மிகத் தெளிவானது என்றபோதும், அரசமைப்பில் உள்ள அதனை அமுல்ப்படுத்த ஆளும்தரப்புக்கள் மறுப்பது, தீர்வுக்கான அவற்றின் கரிசனையை, விருப்பத்தை, அணுகுமுறையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.

இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்தியாவின் பங்கு வரலாற்று ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மறுக்க முடியாத ஒன்றாகும். 13ஆம் திருத்தம் இந்தியாவின் தலையீட்டின் விளைவாக உருவான ஓர் அரசமைப்பு ஏற்பாடாகும். ஆனால், அது முழுமையாக அமுல்படுத்தப்படாமலும், காலப்போக்கில் பல்வேறு வழிகளில் பலவீனப்படுத்தப்பட்டும் வந்துள்ளது. எனவே, இந்திய மைய அரசு, 13ஆம் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற வழக்கமான சொல்லாடலை மீறி, அதற்கான தெளிவான காலவரையறை, அரசியல் அழுத்தம் மற்றும் சர்வதேச தூதரக ஈடுபாடு ஆகியவற்றை பயன்படுத்த வேண்டியது கட்டாயம்.

இந்திய அரசு இங்கு எடுக்கவேண்டிய அணுகுமுறை, சமநிலைமிக்கதும், ஆனால் உறுதியானதுமாக இருக்கவேண்டும். கடந்த பல தசாப்தங்களாக இந்தியாவின் அணுகுமுறை இது விடயத்தில் கொழும்புக்குப் பக்கச்சார்பானதாகவே இருந்து வந்துள்ளது. இலங்கையின் இறையாண்மையை மதிப்பதாகச் சொல்லிக்கொண்டு, மனித உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பில் அது அமைதி காப்பது, நீண்டகாலத்தில் இந்தியாவின் நம்பகத்தன்மையை பாதிக்கிறது. அதேநேரத்தில், இலங்கை அரசுடன் நேரடி மோதல் போக்கை கடைப்பிடிக்காமல், தொடர்ச்சியான அரசியல் உரையாடல், பொருளாதார ஒத்துழைப்புடன் இணைந்த அரசியல் நிபந்தனைகள், மற்றும் சர்வதேச அரங்குகளில் ஒருங்கிணைந்த நிலைப்பாடு போன்ற கருவிகளை இந்தியா பயன்படுத்த முடியும். ஆனால், இதுவரையில் தமிழர் விடயத்தில் அத்தகைய அழுத்தத்தையும் அது பயன்படுத்துவதில்லை. பனிப் போர் காலத்தில் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை ஆயுத வன்முறைப் போராட்டமாக விரிவாக்கம் செய்த இந்தியா, இன்று அதன் விளைவுகளுக்குப் பொறுப்பேற்காமல் இது இலங்கையின் உள்விவகாரம் என்பதுபோல் ஒதுங்கிச் செல்வது அறம் அல்ல.

தமிழ்த் தலைவர்கள், அமைச்சர் ஜெய்சங்கரிடம் கோரிக்கைகளை முன்வைக்கும்போது, இலங்கையின் நீண்டகால அரசியல் நிலைத்தன்மைக்கும், இந்தியாவின் பிராந்திய பாதுகாப்பு நலன்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் அதேநேரம், தமிழர்களுக்குத் தீர்வு விரைந்து வழங்கப்படவேண்டியதன் அவசியத்தையும் காட்டமான வார்த்தைகளில் புரிய வைப்பது அவசியம். வடக்கு கிழக்கு பகுதிகளில் அரசியல் அதிகாரம் பெற்ற, பொறுப்புணர்வு கொண்ட ஆட்சி அமைப்புகள் உருவாகுவது, ஆயுத வன்முறைப் போராட்டம் மீண்டும் தலைதூக்கும் வாய்ப்பைக் குறைப்பதோடு, பிராந்திய அமைதிக்கும் உதவும் என்பதை இந்தியாவிடம் வலியுறுத்தி அது இரு நாடுகளின் பாதுகாப்புக்கும் அவசியம் என்பதையும் உணரவைக்கவேண்டும்.

ஜெய்சங்கரின் இந்தப் பயணம், ஒரு குறுகிய கால தூதரக நிகழ்வாக முடிந்து விடக்கூடாது. வழக்கமாக அது அப்படித்தான். இலங்கையில் உள்ள எல்லாத் தரப்புக்களையும் சம்பிராதயத்துக்குச் சந்திப்பது போலவே தமிழ்த் தலைவர்களையும் அண்மைக்காலமாக இந்தியா சந்தித்து வருகின்றது. அதனால் எந்தப் பயனும் விளைந்ததில்லை. இந்தத் தடவையாவது இலங்கையின் இன அரசியல் பிரச்சினைக்கு ஒரு புதிய அரசியல் முனைப்பை உருவாக்கும் தொடக்கமாக சந்திப்பு அமைய வேண்டியது அவசியம். இந்தியா, தனது வரலாற்றுப் பொறுப்பையும், பிராந்திய சக்தியாகிய தனது கடமையையும் உணர்ந்து, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வரை தொடர்ச்சியான, அளவிடக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான், இந்தப் பயணம் உண்மையான அரசியல் அர்த்தம் கொண்டதாக வரலாற்றில் பதிவாகும். தமிழர்களும் மாற்று வழிகளைத் தேடிப் பயணிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

## 'டிப்ளோமா' உள்ளிட்ட பாடநெறிகளை அறிமுகப்படுத்தும் சுகாதார அமைச்சு

சுகாதாரத்துறையினரின் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சினால் விசேட டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்படும் என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இருதய தொழில்நுட்பம் தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறியை (2025) வெற்றிகரமாக நிறைவு செய்த 351 இருதய வரைபு தொழில்நுட்பவியலாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு மருத்துவ பீடத்தின் புதிய கட்டட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈசிஜி, உடற்பயிற்சி ஈசிஜி, ஹோல்டர் கண்காணிப்பு, இதய வடிகுழாய் பரிசோதனை, இதயத் துடிப்பு முடுக்கி (பேஸ்மேக்கர்) போன்ற பரிசோதனைகள் மற்றும் மருந்தியல் அழுத்துப் பரிசோதனை, நடமாடும் இரத்த அழுத்தக் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளில் இருதய வரைபு தொழில்நுட்பவியலாளர்கள் நோயாளர் பராமரிப்புக்குத் தேவையான பங்களிப்பை வழங்குகின்றனர். தற்போது சுமார் 500 தொழில்நுட்பவியலாளர்கள் இத்துறையில் பணிப்புரிந்து வருகின்றனர். சுகாதாரத்துறையினரின் தொடர்ச்சியான தொழில்சார் நிபுணத்துவத்திற்காக சுகாதார அமைச்சினால் இவ்வாறான விசேட பாடநெறிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் மூலம் சுகாதாரச் சேவையின் தரம் உயர்வதுடன், உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் மனப்பாங்கு விருத்திக்கும் இது பெரும் துணையாக அமையும். இலங்கையின் இலவச சுகாதாரச் சேவையில் துணை மருத்துவ சேவைக்கு சொந்தமான இந்தத் தொழில்நுட்பவியலாளர்களின் அறிவை நவீனமயப்படுத்த சுகாதார அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. சுகாதாரச் சேவையின் எதிர்கால முன்னேற்றத்திற்காக சர்வதேச தரத்திற்கு அமைய இவ்வாறான பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு வினைத்திறனான மற்றும் சிறந்த சேவையை வழங்க முடியும்.

எதிர்காலத்தில் இப்பாடநெறி ஒரு பட்டப்படிப்பாக மாற்றப்படவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. இப்பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுத்த இதய நோய் விசேட வைத்தியர்கள், துறைசார் நிபுணர்கள், பயிற்சி மேற்பார்வையாளர்கள் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளின் ஊழியர்கள் அனைவருக்கும் சுகாதார அமைச்சர் என்ற வகையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் -என்றார்.

## யாழ். – அநுராதபுரம் இடையில் மீண்டும் தொடருந்துச் சேவை

வடக்கு தொடருந்துப் பாதையில் காங்கேசன்துறை முதல் அநுராதபுரம் வரையிலான தொடருந்து சேவை இன்று திங்கட்கிழமை முதல் மீளத் தொடங்கவுள்ளது என தொடருந்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று முதல் சேவையில் ஈடுபடும் யாழ். ராணி தொடருந்து காலை 06 மணிக்கு காங்சேன்துறை நிலையத்திலிருந்து புறப்பட்டு, காலை 10.17 மணியளவில் அநுராதபுரம் நிலையத்தைச் சென்றடையும்,

அதேபோல் பிற்பகல் 02.30 மணியளவில் அநுராதபுரம் நிலையத்தில் இருந்து புறப்படும் யாழ். ராணி மாலை 06.53 மணியளவில் காங்கேசன்துறை நிலையத்தைச் சென்றடையும்.

கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் வடக்கு மற்றும் கிழக்குக்கான தொடருந்து சேவைகள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டன.

சேதமடைந்த தொடருந்துப் பாதைகள் சீரமைக்கப்பட்டு தொடருந்து சேவைகள் கட்டம் கட்டமாக மீளத் தொடங்குகின்றன. இதற்கமைய பதுளை அம்பேவெல தொடருந்து சேவை மீளத் தொடங்கப்பட்டுள்ள நிலையில், காங்கேசன்துறை அநுராதபுரம் வரையிலான தொடருந்துப் பாதை இன்று முதல் தொடங்கவுள்ளது.

அதேபோல் காங்கேசன்துறை கொழும்பு கோட்டை, மற்றும் மட்டக்களப்பு கொழும்பு கோட்டை தொடருந்து சேவைகள் ஜனவரி முதலாம் திகதியில் இருந்தும் தலைமன்னார் - கொழும்பு கோட்டை தொடருந்து சேவை பெப்ரவரி 1 முதலும் தொடங்கவுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## வவுனியா வீரபுரத்தில் நேற்று இளைஞர் வெட்டிக் கொலை

வவுனியா வீரபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக் கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனச் செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞர் உட்பட சிலர் நேற்று மாலை வவுனியாவில் இருந்து வீரபுரம் பகுதிக்குச் சென்றுள்ளனர். இதன்போது அவர்கள் மீது அந்தப் பகுதியை சேர்ந்த வாள்வெட்டுக் குழு ஒன்று தாக்குதல் நடத்தியது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் சாவடைந்துள்ளார்.

சம்பவத்தில் தவசிகுளம் பகுதியை சேர்ந்த அபிசாந் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்தார். சம்பவத்துடன் தொடர்புடைய சிலரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாரம்பரிய மருத்துவத்தைக் காக்க சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்

## சுகாதார அமைச்சர் நளிந்த கருத்து



மேற்கத்திய மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒருங்கிணைப்பதற்கான முறையான வேலைத்திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை உலகளாவிய பாரம்பரிய மருத்துவ உத்திகளைப் பின்பற்றும் நாடாக உள்ளதுடன், பாரம்பரிய மருத்துவத்தைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்தியாவில்நடைபெற்றபாரம்பரிய மருத்துவம் குறித்த இரண்டாவது உலகளாவிய உச்சிமாநாடானது பரம்பரிய மருத்துவ முறைகளைப் பாதுகாத்தல், பிரபல்யப்படுத்துதல் மற்றும் நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளை உறுதிப்படுத்துதல் ஆகிய இலக்குகளுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது. பாரம்பரிய மருத்துவம் குறித்த இரண்டாவது உலக உச்சிமாநாட்டின் இறுதி நாளான வியாழக்கிழமை (19) அன்று, மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலாசார மரபுகள் மற்றும் அறிவியல் தூநிலைகள் ஆகிய இரண்டையும் மதித்து இந்த மருத்துவ முறைகளை நிலையான முறையில் அபிவிருத்தி செய்யவும், நவீன சுகாதார சேவைகளுடன் ஒருங்கிணைக்கவும் உலக சுகாதார நிறுவனம் வகுத்துள்ள வழிகாட்டல் வரைபடத்தை இலங்கை முழுமையாகப் பின்பற்றும். இலங்கை சுகாதார அமைச்சினால் நாடு முழுவதும் நிறுவப்பட்டு வரும் 'ஆரோக்யா' என்னும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேற்கத்திய மற்றும் பாரம்பரிய மருத்துவ முறையையும் ஒருங்கிணைத்து சிகிச்சை சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களில் கணிசமானோர் பாரம்பரிய மருத்துவத்தை நாடுவதால், இதனைத் தேசிய சுகாதாரக் கொள்கையில் மேலும் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கிறேன். இலங்கையின் பாரம்பரிய மருத்துவ வரலாறு சுமார் 5 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. பல தலைமுறைகளாகப் பேணப்பட்டு வரும் மருத்துவக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இது வளர்ச்சியடைந்துள்ளது. 'வெத பரம்பரை' (சிங்கள சொற்பதம் - மருத்துவப் பரம்பரை) என அழைக்கப்படும் இலங்கைக்குக்கே உரிய தனித்துவமான மரபுகள் மற்றும் பரம்பரைகளை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரியங்களின் மூலம் ஒரு பூர்வீகத் தோற்றதுடன் பேணப்பட்டு வருகிறது.

1961ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் கீழ் ஆயுர்வேத, சித்த, யுனானி மற்றும் சுதேச சிகிச்சை முறைகளைக் கொண்ட பாரம்பரிய மருத்துவம் நிறுவனமயப்படுத்தப்பட்டது. ஆயுர்வேதத்திணைக்களம் இலங்கையின் பாரம்பரிய மருத்துவ முறைகளை நடைமுறைப்படுத்தும் பிரதான கேந்திர நிலையமாக செயற்படுகின்றது. அதற்கமைய தற்போது நாட்டில் 2,363 பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ அதிகாரிகளும், 22,000 பாரம்பரிய மருத்துவப் பயிற்சியாளர்களும் உள்ளனர். மேற்கத்திய மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒருங்கிணைப்பதற்கான முறையான வேலைத்திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை உலகளாவிய பாரம்பரிய மருத்துவ உத்திகளைப் பின்பற்றும் நாடாக உள்ளது. அந்தவகையில், பாரம்பரிய மருத்துவத்தைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் - என்றார்.

# மாணவியைப் பழிவாங்கிய அதிபரிடம் விளக்கம் கோரியது கல்வி அமைச்சு

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வர்ண விருது விழாவின்போது, அதிபரால் தான் பழிவாங்கப்பட்டார் என்று மாணவி ஒருவர் மேடையிலேறி எழுப்பிய குற்றச்சாட்டுத் தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு பாடசாலை அதிபரிடமிருந்து விளக்க அறிக்கை கோரியுள்ளது.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலத்தில் அண்மையில் நடைபெற்ற வர்ண விருது விழாவின்போது அந்த பாடசாலையின் மாணவி ஒருவர் விருது வழங்கலின்போது தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக நிகழ்வின்போது மேடைக்கு வந்து அதிபர், மற்றும் விசேட விருந்தினர்கள் முன்னிலையில் பகிரங்கமாகக் குற்றச்சாட்டினார்.

மாணவி குறித்த விடயங்களை ஒலி வாங்கி ஊடாக குறிப்பிட்டுக் கொண்டிருக்கும் போது மேடையில் இருந்த பாடசாலையின் அதிபர் மாணவி தொடர்ந்து பேசுவற்கு அனுமதிக்கவில்லை. அதன் பின்னர் மாணவி ஒலி வாங்கி இல்லாமல் சபையோர் முன்னிலையில் நின்று விடயங்களை குறிப்பிட்டு, விருதை வாங்காமல் விசேட விருந்தினருக்கு வணக்கம் தெரிவித்து மேடையில் இருந்து இறங்கிச் சென்றார்.

இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்பட்டது. பல்வேறு தரப்பினர் மாறுப்பட்ட கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இதையடுத்து சம்பவம் தொடர்பில் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு, கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வர்ண விருது விழாவின்போது இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

தற்போது இச்சம்பவம் குறித்து அதிபரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கை கிடைத்தவுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேடையில் பேசிய மாணவி தனக்குத் தரப்பட்டிருக்க வேண்டிய விருது அற்பக் காரணங்களுக்காக அதிபரினால் தடுக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

தான் பாடசாலை சார்பில் பல போட்டிகளில் கலந்துகொண்டு பல ஆண்டுகளாக வெற்றிகளை குவித்து வந்தேன் என்றும். மேலும் சர்வதேச போட்டிகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி இருந்தேன் என்றபோதும். பரிசளிப்பு விழாவின் ஒத்திகை ஒன்றுக்குத் தான் வராத காரணத்தினால், அதற்கு தண்டனையாக தனக்குக்கிடைக்க வேண்டிய விருதினை அதிபர் தடுத்து நிறுத்தினார் என கூறியுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிடவும் புதிய சட்ட வரைவு மிகவும் மோசமானது

## தமிழ் அரசுக் கட்சி கடும் எதிர்ப்பு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் ஆளும்தரப்பினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சட்டத்திற்கான வரைவில் முன்னைய திருத்தச்சட்ட மூலங்களை விடவும் மோசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்குவதை விடுத்து, அதனைப் பதலீடு செய்வதற்கான ஆளும்தரப்பின் நடவடிக்கைகளை முற்றாக எதிர்ப்போம் என்றும் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து இராச்சியத்தைப் பாதுகாக்கும் சட்டம் எனும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தியும், அச்சட்டம் குறித்து மக்களுக்கு விழிப்பு ணர்வூட்டும் நோக்கிலும் கடந்த காலங்களில் நாடு முழுவதும் கையெழுத்துப் போராட்டத்தை முன்னின்று நடத்திய சுமந்திரன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அதனைப் பதிலீடு செய்யும் வகையில் முன்னர் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பவற்றின் உள்ளடக்கங்களைவிடவும் மோசமான விடயங்கள் இப் புதிய வரைவில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டினர்.

தேசிய மக்கள் சக்தி எதிரணியாக இருந்தவேளையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்படும் அதேவேளை, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குகெனத் தனியான சட்டமொன்று தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தது. அதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றதே தவிர, பிறிதொரு சட்டத்தின் ஊடாக அச்சட்டம் பதிலீடு செய்யப்படும் எனக் கூறப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் புதிதாகப் பிறிதொரு சட்டத்தைக் கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும், ஆகவே அச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான நடவடிக்கைகளைத் முற்றாக எதிர்ப்போம் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி நீதியமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய வரைவின் உள்ளடக்கங்கள் மிகமோசமானவையாக இருப்பதாகவும், அவை பற்றி விரிவாக ஆராய்ந்து தமது கரிசனைகளை வெகுவிரைவில் நீதியமைச்சுக்கு அனுப்பிவைக்க இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## திஸ்ஸ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

யாழ் - தையிட்டி திஸ்ஸ ரஜமஹா விகாரையின்விகாராதிபதிகிந்தொட்டநந்தாராம தேரருக்கு அமரபுர ஸ்ரீ கல்யாணவங்ச நிகாய உத்தரலங்கா உப பிரதான சங்க நாயக்க பதவி நேற்று கொழும்பில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தையிட்டி திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர், திஸ்ஸ விகாரையை அடிப்படையாகக் கொண்டு இன்னும் ஓரிரு மாதங்களுக்கு பின்னர் மீண்டும் பிரச்சினை தோற்றம் பெறாத வகையில் தீர்வு காண்பது மிகவும் சிறந்ததாக அமையும்.

சகல பிரச்சினைகளுக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும். இந்த பிரச்சினைக்கு இரு தரப்பு பேச்சு ஊடாகத் தீர்வு காணவேண்டும். விட்டுக் கொடுப்பது பௌத்த தர்மமாகும். விகாரைக்கு தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதிக் காணியை கோருபவர்களுக்கு, தமிழ் மக்களுக்கு வழங்கி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சிறந்ததாக அமையும்.

திஸ்ஸ விகாரையை முன்னிலைப்படுத்தி தொடர்ச்சியான முரண்பாடுகள், பிரச்சினைகள் தோற்றம் பெறுவது முறையற்றது. இதற்கு உரிய தலைமைத்துவத்தின் ஊடாக பேச்சு நடத்தி முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும் - என்றார்.

## பயங்கரவாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக இந்த சட்டவரைவிலும் காணப்படுகிறது. பிரதமர் ஹரிணி, அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தற்போது உயர்நீதிமன்றம் செல்வார்களா என மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சட்டத்தரணி நுவன் கோபகே கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் உள்ள மக்கள் போராட்ட அமைப்பின் காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துக் செய்வார் என்று குறிப்பிட்டுக் கொண்டே ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வருவார்கள். அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அதனை மறந்து விடுவார்கள்.

2023ஆம் ஆண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் காட்டிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் பாரதூரமானதாகக் காணப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக தற்போதைய பிரதமர் ஹரிணி மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்து பயங்கரவாதஎதிர்ப்புச்சட்டமூலம்முழுமையாக நீக்கப்படவேண்டும் என்று கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

நீதியமைச்சினால் தற்போது வெளியிடப் பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து இராச்சியத்தை பாதுகாக்கும் சட்டத்தை உருவாக்கும் வகையிலான சட்டவரைவில் 2023ஆம்ஆண்டுகொண்டுவந்தபயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் உள்ளடக்கம் முழுமையாக இந்த சட்டவரைவிலும் காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியினர் எதிர்க்கட்சியில் இருக்கும்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதனையே கொண்டு வருவது முறையற்றது. ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பேயின் பற்கள் நன்றாக இருக்காது என்பதை ஆளும்தரப்பிற்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தச் சட்டவரை வுக்குஎதிராகப்பிரதமர்மற்றும்அயலுறவுத்துறை அமைச்சர் உயர்நீதிமன்றம் செல்வார்களா, எதிர்ப்பை வெளிப்படுத்துவார்களா? என்றார்.

## 70 வீதம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவைச் செலவிட்டுள்ளது.

பெருளமளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகள் கிடைத்து வருகின்றன. அவை தேசிய இடர் உதவி சேவைகள் நிலையத்தின் நேரடி ஒருங்கிணைப்புடன் விநியோகிக்கப்படுகின்றன.

பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்ட உணவு, உபகரணங்கள், மருந்துகள் உள்ளிட்ட பொருட்கள் விடுவிக்கப்பட்ட பின்னர், ஒருகொடவத்தை களஞ்சியசாலையிலிருந்து தேவைக்கேற்ப மாவட்ட செயலாளர்கள் ஊடாக அந்தந்த மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த உதவிகள் அனைத்தும் முறையான பொறிமுறையின் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன - என்றார்.

## கணக்காய்வாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்காய்வாளர் நாயகமாகப் பணியாற்றி வருகிறார். அவர் தகுதி இருப்பதாலே பதில் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். அப்படியானால் ஏன் அரசுத் தலைவர் அவரை நியமிக்காமல் இருக்கிறார்?

ஏனெனில் இந்த ஆளும்தரப்பின் கணக்காய்வு நடவடிக்கைகள் அடுத்த வருடத்தில் இருந்தே தொடங்குகின்றன. இந்த வருட காலப்பகுதியில் அரசுத் தலைவர் உள்ளிட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் இந்த ஆட்சியில் மேற்கொண்ட விளையாட்டுக்கள் அனைத்தும் கணக்காய்வுக்கு உட்படுகின்றன, குறிப்பாக 323 கொள்கலன் விடுவிப்பும் கணக்காய்வுக்கு உட்படுகிறது. அதன்போது அரசுத் தலைவரின் கீழ் இருக்கும் நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் வெளிப்படும். அதனை மறைப்பதற்கே அரசுத் தலைவர் தனக்கு நெருக்கமான, தனக்குச் சார்பான ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க முயற்சித்து வருகிறார் என்ற சந்தேகம் எழுகிறது - என்றார்.




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com



### கொழும்பு தேசிய வைத்தியசாலையின்

# பதில் பணிப்பாளர் செய்தவைகள் பணி நீக்கம் செய்யும் குற்றமல்ல

### ஐக்கிய தேசியக் கட்சி கருத்து

தேசிய வைத்தியசாலையின் பதில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பெல்லன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமை, அவரை பணி நீக்கம் செய்யும் அளவுக்கு பாரதூரமான விடயமாக கருத முடியாது. அதனால் அவர் மீண்டும் பணிக்கு திரும்புவார் என நாம்புகிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி மாவட்ட குழு கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் இதனைப் பதிலாகத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பதில் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் பெல்லன பணி நீக்கப்பட்டுள்ளார் என்று ஊடகங்கள் ஊடாகவே அறிந்துகொண்டேன். அவருக்கு வழங்கி இருக்கும் பணி நீக்கம் தொடர்பான கடிதத்தில், பொறுப்புவாய்ந்த பதவி வகிக்கும் அரச வைத்திய அதிகாரியாக பல்வேறு ஊடகங்கள் ஊடாக நாட்டுக்குள் சர்ச்சைக்குரிய நிலைமையை ஏற்படும் வகையிலும் பொது மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையிலும் செயற்பட்டு, அனுமதியில்லாமல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பணி நீக்கம் செய்யப்படவேண்டிய சம்பவமாக நான் காண்பதில்லை. நானும் பொது நிர்வாக அமைச்சராக செயற்பட்டிருக்கிறேன். இது பணி நீக்கம் செய்யப்படுவதற்கோ வெளிநாடு செல்வதை தடுப்பதற்கோ பொருத்தமான நடவடிக்கையல்ல. அதனால் அவர் இந்தக் காலத்திற்குரிய பணத்துடனும் மீண்டும் சேவைக்கு திரும்புவார்.

அவரின் பணி நீக்கம் தொடர்பில் எங்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அவரின் சுகாதார நிலைமை தொடர்பில் பல அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். உலகில் அரச தலைவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டால், உதாரணமாக கொரியா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் அந்த வைத்தியசாலை பணிப்பாளர்கள் அல்லது வைத்திய தலைமை அதிகாரி அது தொடர்பாக தகவல்களை வெளியிடுவார்கள். அது முக்கியமாகும்.

அதனால் சர்வதேச செய்திச் சேவைகளில் இவ்வாறான நிலைமைகள் தொடர்பான அறிவிப்புகளை மீண்டுமொருமுறை பார்த்தால் இந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முடிந்திருக்கும் - என்றார்.

# யாழ். மாவட்டத்தை கல்வியின் மைய இடமாக மாற்றவேண்டும்

### கிளிநொச்சி நிகழ்வில் பிரதமர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தை கல்வியின் மையமாக மாற்றவேண்டும். வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும், எமது மக்களும் எமது பிள்ளைகளுமே இருக்கின்றனர். ஒவ்வொரு பாடசாலையும் எமது பாடசாலை. தேசிய-மாகாண பிளவை மறந்துவிடுங்கள். அந்த அனைத்துப் பாடசாலைகளிலும் இருப்பது நமது பிள்ளைகள். அந்தப் பிள்ளைகள் அனைவரும் தரமான கல்வியைப் பெறும் உரிமையை நாம் உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்தார்.

அரசுத் தலைவர் நிதியத்தால் செயல்படுத்தப்படும் 2023/2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட அளவில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்திற்கான நிகழ்ச்சி பிரதமர் ஹரிணி தலைமையில் நேற்று (21) முற்பகல் கிளிநொச்சி நெலும் பியச வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயர் சித்திபெற்ற 274 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு தலா 100,000 ரூபா ஊக்கவிப்புக் கொடுப்பனவு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதற்காக அரசுத் தலைவர் நிதியம் 27.4 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

நாட்டில் மாகாண மட்டத்தில் தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் தொடரின் இறுதி நிகழ்ச்சி இதுவாகும். இதன் மூலம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 3,000 மாணவர்கள் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றைய நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் யாழ் மாவட்டத்தில் தொடங்கியது. இன்று, இந்த நிகழ்ச்சித்திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. எனவே, க.பொ.த உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் இறுதி நிகழ்வு, யாழ் மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடைபெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அரசுத் தலைவர் நிதியம் என்பது மக்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய நிதியமாகும். தற்போதைய ஆளும்தரப்பு இந்த நிதியத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தை கல்வியின் மையமாக மாற்ற வேண்டும். வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும், எமது மக்களும் எமது பிள்ளைகளுமே இருக்கின்றனர். ஒவ்வொரு பாடசாலையும் எமது பாடசாலை. தேசிய-மாகாண பிளவை மறந்துவிடுங்கள். அந்த அனைத்து பாடசாலைகளிலும் இருப்பது நமது பிள்ளைகள். அந்த பிள்ளைகள் அனைவரும் தரமான கல்வியைப் பெறும் உரிமையை நாம் உறுதி செய்ய வேண்டும்.

எனவே, ஆசிரியர்களை நியமிக்கும்போதும், அவர்களை இடமாற்றம் செய்யும்போதும், அதிகாரிகளை நியமிக்கும்போதும், யாழ்ப்பாணத்தைப் பற்றி மட்டும் சிந்திக்காதீர்கள். ஏனைய மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் பற்றி சிந்தித்து, அவ்வாறே இங்கும் செயல்படுங்கள்.

நீங்கள் உண்மையிலேயே திறமையானவர்கள். இங்குள்ள நீங்கள் பல்கலைக்கழகத்திற்குச் சென்று வடக்கு மாகாணத்திற்கு சேவை செய்ய மீண்டும் வருவீர்கள் என்று நான் நம்புகிறேன். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில், வட மாகாணம் குறித்த முடிவுகளை எடுப்பவர்கள் நீங்கள்தான். அப்போதுதான், வட மாகாணத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு நீங்கள் தலையிடுவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு ஆளும்தரப்பாக, அந்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டே இந்தத் தலையீட்டைச் செய்கிறோம் என்பதைக் கூற வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன், அரசுத் தலைவரின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் மற்றும் அரசுத்தலைவர் நிதியத்தின் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் தங்கள் கருத்துக்களை இதன்போது தெரிவித்தனர்.

# கல்வித்துறையை மீளக்கட்டியெழுப்ப ஆளும்தரப்புக்கு யுனிசெவ் ஆதரவு

பேரிடருக்கு பின்னர் கல்வித் துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஆளும்தரப்பின் அர்ப்பணிப்பையும், அதற்காகச் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் பாராட்டிய யுனிசெப் பிரதிநிதிகள், ஆளும்தரப்புக்குத் தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

பிரதமர் கலாநிதி ஹரிணிக்கும் யுனிசெப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இயற்கைப் பேரிடர் ஏற்பட்ட தருணத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில், பாதிக்கப்பட்ட மாணவர் சமூகத்தைப் பாதுகாக்கவும், சேதமடைந்த பாடசாலைக் கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்பவும் ஆளும்தரப்பு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும், அதன்போது எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் பிரதமர் இதன்போது விளக்கினார்.

மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளை மீண்டும் அதே இடங்களில் திறப்பது ஆபத்தானது என்பதால், அத்தகைய பாடசாலைகளை இனங்கண்டு, அறிவியல்பூர்வமான தரவுகளின் அடிப்படையில் அவற்றை மிகவும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவது குறித்து ஆளும்தரப்பு அவதானம் செலுத்தி வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், பெற்றோர்களுக்கு மேலதிகச் சுமையை ஏற்படுத்தாத வகையில் பிள்ளைகளை மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீட்டிற்கு அடுத்தபடியாகப் பிள்ளைகளுக்கு மிகவும் பாதுகாப்பான இடம் பாடசாலை என்பதால், அங்கு அவர்களின் உள ஆரோக்கியம் மேம்படும் எனத் தாம் நம்புகின்றனர் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பாடசாலைகளை இடமாற்றம் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல், சில பாடசாலைகளை ஒன்றிணைத்து நடத்திச் செல்லல், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப உத்திகள் மூலம் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை எளிதாக்குதல் மற்றும் விசேட போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்ற விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இப்பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து நீண்டகாலத் தீர்வுகளைக் காண்பதில் ஆளும்தரப்பு உறுதியாக உள்ளதாகப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

கல்வித் துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஆளும்தரப்பின் அர்ப்பணிப்பையும், அதற்காகச் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் பாராட்டிய யுனிசெப் பிரதிநிதிகள், அரசாங்கத்திற்குத் தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தனர். மேலும், எதிர்கால நடவடிக்கைகளை இரு தரப்பினரும் இணைந்து முன்னெடுப்பதன் அவசியம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி எம்மா பிரிகாம், லட்சுமி சுரேஷ்குமார், நிஷாந்த சுபாஷ், யஷிங்க ஜயசிங்க ஆகியோருடன் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, கல்விப் பணிப்பாளர் தக்ஷிண கஸ்தூரியாராச்சி, பிரதிப் பணிப்பாளர் கசுன் குணரத்ன மற்றும் உதார திக்கும்புர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# புத்தூர் விபத்தில் இளைஞன் சாவு

யாழ். மாவட்டம் புத்தூரில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று பேருடன் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த காரும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்களில் ஒருவரான புத்தூர் மணற் பகுதியை சேர்ந்தவர் உயிரிழந்தார். அவரது வயது 25. விபத்தில் காயமடைந்த மேலும் ஒருவரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தினால் மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த தந்தையும், தாயும் மகனும் சிறு காயங் களுக்குள்ளாகினர். காயமடைந்தவர்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2025இல் வெளியிடப்பெற்றது